கோயம்புத்தூர் மாவட்டம்
கருமத்தம்பட்டி நகராட்சி
**நாள். 24.01.2023**

## அவசரக் கூட்டம்

2023–ம் ஆண்டு ஜனவரி மாதம் 25ஆம் தேதி புதன்கிழமை காலை 11.30 மணிக்கு கருமத்தம்பட்டி நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் கீழ்காணும் பொருள்கள் குறித்து நடைபெறவுள்ளது.

## கூட்டப் பொருள்

**பொருள் எண் :01**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.116 நாள்.24.08.2022ன் படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள வெளிக்கொணர்வு ஆட்களை தமிழ்நாடு வெளிப்படையான டெண்டர் முறை 1998 மற்றும் 2000இன் படி சேவை வழங்குவோர் மூலம் பணி அமர்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி அனுமதியின்படி கருமத்தம்பட்டி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை சேவை வழங்குவோர் ( Service Provider / Agency / Contractor) மூலம் மேற்கொள்ள தேவையான பணி ஆட்களுக்கான அனுமதி வேண்டி கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதி பெறப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி கடிதம் ந.க.எண்.33552/2022/EA2 – SWM – 6 நாள்.10.01.2023 ல் கருமத்தம்பட்டி நகராட்சிக்கு வெளிக்கொணர்வு மூலம் பணி ஆட்களை நகராட்சியில் சேகரமாகும் குப்பையின் அளவின்படி பணியமர்த்திட கீழ்காணுமாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| Quantity of Waste Generated (TPD) | 11.32 M.T |
| Rate Per Tonne (in Rs) | 5044 |
| Estimated Base Cost per day (Rs.in Lakh) | 0.57 ( 5044*11.32MT) |
| Estimated base cost per year (Rs.in Lakh) | 208.05 (0.57 *365Days) |

| | |
|---|---|
| Applicable GST 18% and LWF 1%(Rs.in Lakh) | 39.52 |
| Estimated total cost per year (Rs.in Lakh) | 247.57 |

மேற்கண்ட அனுமதியின்படி கருமத்தம்பட்டி நகராட்சியில் நாள் ஒன்றுக்கு சேகராமாகும் குப்பையின் அளவின்படி வெளிக்கொணர்வு மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள ஒரு வருடத்திற்கு தேவையான செலவினம் ரூ.2,48,00,551/—ஆகும். மேலும் சேவை அமர்த்துவோரின் சேவைகட்டணம் 5% சேர்த்து ரூ.2,60,40,579/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் சேவை வழங்குவோர் தமிழ்நாடு வெளிப்படையான டெண்டர் முறையின்படி மூன்று வருட காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் ஒவ்வொரு வருடமும் ஒப்பந்தப்புள்ளியினை செயல்திறனின் அடிப்படையில் நீட்டிப்பு செய்திடவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே கருமத்தம்பட்டி நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள சேவை வழங்குவோரை பணி அமர்த்திட ஒப்பந்தப்புள்ளி கோரவும் மேற்காண் செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியில் செலவிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்

நகராட்சி பொறியாளர் ஆணையாளர் நகர்மன்ற தலைவர்

நகராட்சி தலைவர்
கருமத்தம்பட்டி நகராட்சி